**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.**
**TIRUVANNAMALAI.**
**S.C. No. 30/2024**
**PW11**

| | | |
|---|---|---|
| Name | : | மருத்துவர் நரேந்தர் |
| Father's/Husband's Name | : | எம்.ராஜசேகர் |
| Village | : | |
| Taluk/District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 09.10.2025.
Accused present.

**முதல் விசாரணை**

நான் தற்போது கிருஷ்ணகிரி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சட்டம் சார்ந்த மருத்துவதுறையில் இணை பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 09.12.2022 அன்று காலை 10.20 மணி அளவில் சென்னை அரசு மருத்துவக்கல்லூரியில் சட்டம் சார்ந்த உயர்நிலை மருத்துவ துறையில் உதவி பேராசிரியராக பணியில் இருந்த போது போளூர் காவல் நிலைய குற்ற எண். 609/2022 தொடர்புடைய 26 வயது மதிக்கத்தக்க ஆண் மணிகண்டன் என்பவரது பிரேதத்தை பிணக்கூறாய்வு செய்யவேண்டிய காவல் ஆய்வாளரின் விண்ணபத்தை சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.செல்வராஜ் என்பவரிடம் பெற்றேன். அவர் பிரேத்தை அடையாளம் காண்பித்தார். அதன்பின் காலை 10.25 மணி அளவில் பிணக்கூறாய்வு செய்ய தொடங்கினேன். நான் பரிசோதனை செய்த போது அவருக்கு உடல் முழுவதும் மரண விறைப்பு காணப்பட்டது. அவருக்கு இறப்புக்கு முன் ஏற்பட்ட கீழ்கண்ட காயங்கள் காணப்பட்டது.

1. ஒழுங்கற்ற பழுப்பு நிற பக்கு மூடிய சிறாய்பு காயங்கள்.

a) 2X 1 செமி அளவில் வலது காது மடலின் பின்புறம் காணப்பட்டது.

b) 1x 0.5 செமீ அளவில் வலது மார்பு பகுதியின் மேல் 2ம் பகுதியில் காணப்பட்டது.

C) 1x 0.5 செமீ அளவில் வலது முகத்தின் முன்புறம் மேல் 3ம் பகுதியில் காணப்பட்டது.

d) 3x0.1 செமீ அளவில் வலது தோள் பட்டையின் பின்புறம் காணப்பட்டது.

e) 4x0.5 செமீ அளவில் இடது புற புட்டத்தின் மேல் 2ம் பகுதியில் காணப்பட்டது.
2) கருஞ்சிவப்பு நிறத்திலான கன்றிய காயம். 7X5 செமீ x தசை ஆழம் அளவில் இடது முன்னங்கையின் பின்புறம் மேல் 3ம் பகுதியில் காணப்பட்டது.
3) கருஞ்சிவப்பு நிறத்திலான கன்றிய காயம். 8X3 செமீ x தசை ஆழம் அளவில் வலது முன்னங்கையின் பின்புறம் மேல் 3ம் பகுதியில் காணப்பட்டது.
4) தையலிடப்பட்ட கிழிந்த காயம் 3 செமீ அளவில் மேல் உதட்டின் வலது பக்கம் உட்புறத்தில் காணப்பட்டது. தையலை பிரிந்தபோது அக்காயமானது 3 x 0.5 x 0.5 செமீ அளவிலும் அதன் விளிம்புகள் ஒழுங்கற்றும் விரிந்தும் காணப்பட்டது.
5) தையலிடப்பட்ட கிழிந்த காயம் 2 செமீ அளவில் கீழ் உதட்டின் வலது பக்கம் உட்புறத்தில் காணப்பட்டது. தையலை பிரிந்தபோது அக்காயமானது 2 x 0.5 x 0.5 செமீ அளவிலும் அதன் விளிம்புகள் ஒழுங்கற்றும் விரிந்தும் காணப்பட்டது.
6. தையலிடப்பட்ட கிழிந்த காயம் 7 செமீ அளவில் வலது பக்க முகவாயில் காணப்பட்டது. தையலை பிரிந்தபோது அக்காயமானது 7 x 0.5 செமீ x எலும்பு ஆழம் அளவிலும் அதன் விளிம்புகள் ஒழுங்கற்றும் விரிந்தும் காணப்பட்டது. மேலும் கூறாய்வு செய்ததில் ஒழுங்கற்ற முழுமையான எலும்பு முறிவு வலது மற்றும் இடது தலை எலும்புகளில் காணப்பட்டது. அதனை சுற்றி ரத்தக்கசிவும் கன்றிய காயமும் காணப்பட்டது.
7. மண்டை ஓட்டு தோல் பகுதியில் கூறாய்வு செய்தபோது கருஞ்சிவப்பு நிறத்திலான கன்றிய காயம். 11X7 செமீ x தோல் ஆழம் அளவில் வலது நடு மற்றும் பக்கவாட்டு மண்டை ஓட்டு தோல் பகுதியில் காணப்பட்டது. கருஞ்சிவப்பு நிறத்திலான கன்றிய காயம் 9X5 செமீ x தோல் ஆழம் அளவில் இடது நடு மற்றும் பக்கவாட்டு மண்டை ஓட்டு தோல் பகுதியில் காணப்பட்டது. மண்டை ஓடு மற்றும் மூளை மேல் உள்ள சவ்வு பகுதி நல்ல நிலையில் காணப்பட்டது. பரவிய கருஞ்சிவப்பு நிறத்தினாலான ரத்தக்கசிவு இடது நடு பக்கவாட்டு மற்றும் பின் பெருமூளை பகுதிகளிலும் சிறுமூளை பகுதியிலும் சவ்வுக்கு மேலும் கீழும் காணப்பட்டது. மூளை வீங்கி காணப்பட்டது. கூறாய்வு செய்ததில் நல்ல நிலையில் காணப்பட்டது. மண்டை ஓட்டின் அடிப்பகுதி நல்ல நிலையில் காணப்பட்டது.

இதயம் சாதாரண அளவில் காணப்பட்டது. கூறாய்வு செய்ததில் அனைத்து அறைகளிலும் ரத்தம் கெட்டியாகவும் திரவ நிலையிலும் காணப்பட்டது. வால்வுகள், இதயத்திற்கு செல்லும் ரத்தக்குயாழ்கள் மற்றும் பெருந்தமனிகள் நல்ல நிலையில் காணப்பட்டது.

நுரையீரல் சாதாரண அமைப்பில் காணப்பட்டது. அதன் மேல் நிறைய ரத்த புள்ளிகள் காணப்பட்டது. கூறாய்வு செத்ததில் ரத்தம் தோய்ந்து காணப்பட்டது. மூச்சுக்குழாய் மற்றும் குரல் வலை காலியாக காணப்பட்டது. நாவடி எலும்பு நல்ல

நிலையில் காணப்பட்டது. இரப்பையில் 20 மில்லி அளவிலான பழுப்பு நிற திரவம் எவ்வித வாசனையும் இன்றி காணப்பட்டது. இரப்பையின் உட்படலம் ரத்தம் தோய்ந்து காணப்பட்டது. கல்லீரல் பெரியதாக காணப்பட்டது. கூறாய்வு செய்ததில் ரத்தம் தோய்ந்து மஞ்சள் படலங்களுடனும் காணப்பட்டது. மண்ணீரல் மற்றும் சிறுநீரகங்கள் சாதாரண அளவில் காணப்பட்டது. கூறாய்வு செய்ததில் ரத்தம் தோய்ந்து காணப்பட்டது. சிறுநீர்ப்பை காலியாக காணப்பட்டது. மார்பெலும்புகள், இடுப்பெலும்புகள் மற்றும் முதுகெலும்புகள் நல்ல நிலையில் காணப்பட்டது. உடல் உள்ளுறுப்புகள் ரசாயன பரிசோதனைக்கு சேகரிக்கப்பட்டது. ரசாயன பரிசோதனை அறிக்கை பெறும் வரை இறப்புக்கான காரணத்தை நிறுத்தி வைத்து நான் வழங்கிய பிரேத பரிசோதனை சான்றிதழ் **அ.த.சா.ஆ.**7. நஞ்சியல் அறிக்கை 22.12.2022 அன்று பெறப்பட்டது. அதில் சாராயம் மற்றும் நச்சு பொருட்கள் எதுவும் இல்லை என்று கண்டறியப்பட்டது. அந்த அறிக்கை **அ.த.சா.ஆ.8.** பின்னர் நான் 22.12.2022 அன்று இறுதி அறிக்கை வழங்கினேன். அதில் மேற்படி நபர் தலையில் ஏற்பட்ட மழுங்கிய விசை காயங்களினால் உண்டான விளைவுகளினால் இறந்திருக்கக்கூடும் என்று கருத்து தெரிவித்தேன். அந்த இறுதி அறிக்கை **அ.த.சா.ஆ.9.** முள்வேலி கொம்பால் ஒரு நபரை தாக்கினால் மேற்படி காயங்கள் ஏற்பட்டு இறப்பு ஏற்பட வாய்ப்புண்டு. இது சம்மந்தமாக என்னை போலிசார் விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை –</u>**

நான் மேற்கூறிய காயங்களில் இருந்த முதல் காயத்தில் a முதல் E வரை ஊள்ள காயங்கள் ஒரு நபரை தடியால் வலது முகவாய் பகுதியால் தாக்கினால் ஏற்பட வாய்ப்பில்லை என்றால் 1 (a) காயம் மட்டும் ஏற்பட வாய்ப்புண்டு. 1b முதல் e வரை உள்ள காயங்கள் ஏற்பட வாய்ப்பில்லை. 2, 3 காயங்கள் கன்றிய காயங்கள் ஒரு நபரை தடியால் வலது முகவாய் பகுதியால் தாக்கினால் ஏற்பட வாய்ப்பில்லை என்றால் முகவாயில்தாக்கப்படும் போது கையினால் தடுத்தால் ஏற்பட வாய்ப்புண்டு. 3 முதல் 6 காயங்கள் ஒரு நபர் கடுமையான பொருள் மீது விழுந்தால் ஏற்பட வாய்ப்புண்டா என்று கேட்டால் எல்லா காயங்களும் ஏற்பட வாய்ப்பில்லை. 1 முதல் 3 காயங்கள் ஏற்பட வாய்ப்பில்லை. காயங்கள் 4 முதல் 6 ஏற்பட வாய்ப்புண்டு. முகவாயில் ஒரு நபர் தாக்கப்பட்டால் மண்டை ஓட்டுக்கு உள்ளே காயங்கள் ஏற்பட வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. மண்டை ஓடும் மூளையும் சாதாரண நிலையில் இருந்ததா என்றால் இல்லை. மண்டை ஓட்டின் வெளியே கன்றிய காயங்கள் இருந்தன. மூளையை சுற்றி ரத்தக்கசிவு இருந்தது. மூளை வீங்கி காணப்பட்டது. அனைத்து காயங்களும் ஒரு நபர் கருங்கல் போன்ற கடுமையான பொருள் மீது விழுந்தால் ஏற்பட வாய்ப்புண்டு என்று

சொன்னால் சரிய்லல. தற்போது நீதிமனறத்தில் காண்பிக்கப்படும் ச.பொ.1 தடியால் அடித்தால் மேற்படி காயங்கள் ஏறபட வாய்ப்பில்லை என்று சொன்னால் சரியல்ல. இறந்த நபருக்கு ஏறப்ட்ட அனைத்து காயங்களும் தடியால் ஒரே முறை அடித்தால் ஏற்பட வாய்ப்புண்டா என்று கேட்டால் வாய்ப்புகள் இல்லை.

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

**Sd/- B.C . Gopinath**
Additional District Judge,
Tiruvannamalai.